Chapter *XXIII Code of Criminal Procedure)*

| *IN THE COURT OF`* | I ADDITIONAL DISTRICT COURT TIRUNELVELI | | |
|---|---|---|---|
| Calendar | | SC.No.564/2022 | |
| Miscellaneous | | | |
| Preliminary Register | | | |
| Sessions | | | |
| Deposition of Witness for | | Prosecution | P.W. 1 |
| | | Defence | |
| Name | | திருமதி.சிவனம்மாள் | |
| Husband's Name | : | திரு.சசிகுமார் | |
| Village | : | சுப்பையாபுரம் | |
| Taluk | : | மானூர் | |
| Calling | : | அரசு தரப்பு சாட்சி | |
| Age | : | 42 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 2nd day of June 2026.

(1,3,4,5 எதிரிகள் ஆஜர். 6 எதிரி ஆஜர் இல்லை. 6 வது எதிரி தரப்பில் கு.வி.மு.ச 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.)

<u>முதல் விசாரணை</u> :–

நான் தற்போது மானூர் சுப்பையாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். சாட்சி அபினேஷ் எனது மகன். சாட்சி மனோஜ்குமார் எனது மச்சான் மகன். சாட்சி சண்முகையாத்தேவர் மகன் ராமச்சந்திரன் என்பவரை எனக்கு தெரியாது. இந்த வழக்கில் இறந்துபோன சசிகுமார் எனது கணவர். ஆஜர் எதிரிகள் அனைவரும் எனக்கு தெரியும். இன்று நீதிமன்றத்தில் ஆஜராகாத 6 வது எதிரி சிதம்பரக்குமாரை என்பவரை எனக்கு தெரியாது. இவ்வழக்கின் இறந்துபோன 2 வது எதிரி அழகுபாண்டி

என்பவரை எனக்கு தெரியும். எங்களது ஊரில் உள்ள பிள்ளையார் கோவிலில் பிரச்சனை நடந்தது. அந்த பிரச்சனை எனது கணவருக்கும், ஆஜர் எதிரிகளுக்கும் நடந்தது. அது சம்மந்தமான எதிரி அழகுபாண்டி எனது கணவர் உட்பட 9 பேர்கள் மீது மானூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். எனது கணவர் இறப்பதற்கு 1 வாரத்திற்கு முன்பு தேவர்குளம் சாலையில் எதிரிகள் தரப்பில் கொலை செய்வதற்கு விரட்டினார்கள். கடந்த நான்கு வருடத்திற்கு முன்பு ஒரு நாள் எனது கணவர் எங்கள் ஊரில் இருந்து நயினார்குளம் மார்கெட்டிற்கு ஆட்டோவில் காய்கறிகளை ஏற்றிக்கொண்டு சென்றார். அங்கு வைத்து எதிரிகள் தரப்பில் எனது கணவரை வெட்டிக்கொலை செய்துவிட்டதாக மார்க்கெட்டில் இருந்து எனக்கு போன் செய்து சொன்னார்கள். அவர்கள் எனது கணவரை ஹைகிரவுண்டு மருத்துவமனைக்கு கொண்டு செல்வதாக என்னிடம் கூறினார்கள். நான் ஹைகிரவுண்டு மருத்துவமனைக்கு சென்று எனது கணவரை பார்க்க முயன்றபோது என்னை பார்க்க அனுமதிக்கவில்லை. பின்னர் சிறிதுநேரம் கழித்து இறந்துவிட்டதாக மருத்துவர் என்னிடம் கூறினார். நடவடிக்கை எடுக்க காவல்நிலையம் சென்று புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியாது. நான் தச்சநல்லூர் காவல்நிலையம் சென்று மேற்படி புகார் மனுவை கொடுத்தேன். மேற்படி புகார் மனு **அ.சா.ஆ.1** ஆகும். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

<u>1,3,4,6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :-

எனது கணவர் ஊரில் ஏதாவாது பிரச்சனை ஏற்பட்டால் அது

சம்மந்தமான முன் நின்று பேசுவார் என்றால் சரிதான். எனது கணவர் அவ்வாறு பேசுவதால் ஊரில் உள்ளவர்களில் சிலருக்கு என் கணவர் மீது விரோதம் உண்டு என்று சொன்னால் தெரியாது. நான் முதல்விசாரணையில் சொன்ன கோவில் சொத்து தொடர்பாக எத்தனை செண்ட் என்றும், அது யார், யாருக்கு இடையில் பிரச்சனை என்றும் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். சம்பவத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பு எதிரிகள் எனது கணவரை கொலை செய்வதற்கு விரட்டியதாக சொல்லியுள்ளது சம்மந்தமாக எந்தவித புகாரும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். நான் தச்சநல்லூர் காவல் நிலையத்திற்கு நான் புகார் கொடுக்க சென்றபோது யார் இருந்தார்கள் என்றால் நான் வண்டியிலே இருந்தேன். அவர்கள் வந்து கையெழுத்து மட்டும் பெற்றுக்கொண்டார்கள். என்னை காவல்துறையினர் எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் புகார் கொடுத்தபின்பு இருபது நாட்கள் கழித்து விசாரித்தார்கள். அவ்வாறு 20 நாட்கள் கழித்து எந்த காவல்நிலைய அதிகாரிகள் வந்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எதிரிகளின் பெயரும், அவர்கள் எங்குயிருக்கிறார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் எதிரிகளை முகம் தான் தெரியும், பெயர் தெரியாது. எதிரிகளை பற்றிய மற்ற விவரங்கள் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். நான் என்ன படித்துள்ளேன் என்றால் ஐந்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் ஐந்தாம் வகுப்பு படித்துள்ளதாக சொல்வதும், அ.சா.ஆ.1ல் உள்ள கையெழுத்தும் என்னுடையது இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. எனக்கு எழுதப்படிக்க தெரியாது என்றும் காவல்துறையினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. எதிரிகளை தெரியும் என்று

சொல்வதும், காவல்துறையினர் என்னிடம் கேட்டுக்கொண்டதன் பேரிலும், அவர்கள் சொல்லிக்கொடுத்தன்பேரிலும் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகளை தெரியும் என்று காவல்துறையினர் சொன்னதற்காக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5ம் எதிரி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

மறுவிசாரணை இல்லை.